# பொதுக்காலத்தின் இருபத்தொன்பதாம் ஞாயிறு

# திருவழிபாடு ஆண்டு - B

# 2024-10-20

*(இன்றைய வாசகங்கள்:*

*இறைவாக்கினர் எசாயா நூலிலிருந்து வாசகம்.* 53:10-11,

*பதிலுரைப்பாடல்: திபா.* 33:4-5, 18-20,22,

*எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்திலிருந்து வாசகம்.* 4:14-16,

*மாற்கு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்* 10: 35-45)

## திருப்பலி முன்னுரை

*அழைக்கப்பட்டவர்களே, பொதுக்காலத்தின் இருபத்தொன்பதாம் ஞாயிறு திருப்பலியை சிறப்பிக்க உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். கிறிஸ்தவர்கள் அனைவரும் இயேசுவின் துன்பக் கிண்ணத்தில் பங்குபெறுவதன் அவசியத்தை உணர இன்றைய திருவழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கிறது. மனிதராய் பிறந்த அனைவரும் துன்பத்தை ஏற்பதன் வழியாக, இன்பத்தின் மேன்மையை உணர அழைக்கப்பட்டிருக்கிறோம். கிறிஸ்து தனது சிலுவை மரணத்தின் வழியாக உயிர்ப்பின் மாட்சியை அடைந்தார். இறைத்தந்தையின் இரக்கத்தைப் பெற்று கிறிஸ்துவின் வலப்பக்கத்தில் அமருமாறு, தூய வாழ்வு வாழவே நாம் படைக்கப்பட்டிருக்கிறோம். தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்த இறைமகன் இயேசுவைப் பின்பற்றி வாழ வரம் வேண்டி, இந்த திருப்பலியில் பங்கேற்போம்.*

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*எங்கள் ஆயரே இறைவா!*

*எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் உம்மைப் போல் நல்லாயர்களாய் மக்களை ஒருங்கிணைத்து அன்பின் வழியில் வழிநடத்த வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*வாழ்வளிக்கும் இறைவா!*

*நீர் மக்களைப் பஞ்சத்திலிருந்து விடுவித்து வாழ்விக்கின்றவராக இருக்கிறீர். நாட்டில் வறுமையினால் பரிதவிக்கும் மக்களை அரவணைத்து வாழ்வளிக்க வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*ஆறுதல் அளிப்பவரே எம் இறைவா!*

*உமது மக்கள் கொடிய நோய்கள், கடன் பாரங்கள் போன்ற பல்வேறு துன்பங்களுக்கு உட்பட்டு மன அமைதி இல்லாமல் தவிக்கின்றார்கள். அவர்கள் துன்பங்களிலிருந்து விடுபட நீரே ஆறுதாக இருக்க வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*அனைத்திற்கும் முதலானவரே இறைவா!*

*நாட்டை ஆட்சி செய்கின்ற தலைவர்கள், நான் என்ற ஆணவத்தினால் தன்னலம் கருதாமல் மக்கள் நலம் கருதி நல்லாட்சி புரிய வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*நோய் தீர்க்கும் வள்ளலே எம் இறைவா!*

*பலவித கொடிய நோய்களால் அவதிப்படுகின்ற உம் மக்களுக்கு நீரே மருத்துவராக இருந்து, அவர்கள் நோயிலிருந்து விடுபட வேண்டிய அருளைப் பொழிய வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*அன்பின் பிறப்பிடமே இறைவா!*

*நான்தான் அனைத்திற்கும் தலைவன் என்று பிறரின் துன்பங்களைக் கண்டு சிரித்து வாழும் மக்களாக வாழாமம் பிறரின் துன்பங்களைக் காணும்போது உதவி செய்யும் மக்களாக எங்களை வழிநடத்த வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*துன்புற அழைப்பவராம் இறைவா,*

*உம் திருமகன் இயேசுவின் சிலுவைப் பயணத்தைப் பின்பற்றி, இறையாட்சியின் இலட்சியங்களுக்காக தங்களை முழுமையாக அர்ப்பணிக்கும் நல்ல உள்ளத்தை எம் பங்குத்தந்தை, அருட்சகோதரிகள், பங்கு மக்கள் அனைவருக்கும் தந்தருள வேண்டு மென்று உம்மை மன்றாடுகிறோம்.*